# மே மாத சுற்றுமடல் 2020

**கிறிஸ்துவில் அன்புள்ள சகோதரிகளே!**

**உயிர்த்த இயேசுவின் அன்பும் வாழ்த்துக்களும்.**



இத்திருவழிபாட்டு ஆண்டில் நிகழ்ந்த விபூதிப் புதனன்று யாருமே நினைத்துப் பார்த்திருக்க மாட்டோம் தவக்காலத்தின் உச்சகட்டமாம் புனிதவாரத்தில் என்றுமில்லாது அனைவரும் வீடுகளில் தனித்திருப்போமென்று. கொரோனா என்ற நுண்ணுயிரி வந்த வேகத்தில் உலகத்தையே முடக்கிவிட்டது. 2020 ல் இந்தியா வல்லரசாகும் என்ற கனவு போய் சாமான்யன் சாகாது இருக்க வேண்டுமென்ற அச்சம் மேலோங்கிய சூழ்நிலையில் உள்ளோம். கல்வி நிலையங்கள் மற்றும் பிற பணிகள் முடக்கப்பட்டுவிட்டன. இல்லங்களில் நாமும் தனித்துள்ளோம். 24 மணி நேரம் முழுமையாக நமக்குத் தரப்பட்டுள்ளது. நமது பணியை, நமது இருத்தலை தராசிலிட்டு தரம் பார்க்கும் நேரமாகக் கொள்ளலாம். அன்று இயேசுவின் மரணத்துக்குப் பின் பூட்டிய வீட்டுக்குள் முடங்கி இருந்தனர் திருத்தூதர்கள். அவ்விதம் முடங்கியிருந்தோரை செபத்தில் ஒண்றிணைத்து இயங்க வைத்தவர் அன்னை மரியாள். நம்மையும் இயங்க வைக்க எட்டு நாள் தியானத்தின் வழி அழைப்பு விடுத்தவர் அதே அன்னை அமலோற்பவி. ஊரடங்கு எப்போது முடிவுக்கு வரும் எனத்தெரியாது. ஆனால் ஒன்று மட்டும் உறுதி. இறைக்கரம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்மையும் செயல்பட அழைக்கிறது இந்நாட்களில். எப்படி?

“நேரம் போதவில்லை” என்று கூறிய இவ்வுலகு “நேரம் போகவில்லை” என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. இத்தகு சூழலில் திருந்தந்தை பதினாறாம் பெனடிக்ட் 2010 ஆம் ஆண்டு கொடுத்த கிறிஸ்துமஸ் செய்தியின் சுருக்கத்தை அசைபோட்டுப் பார்ப்போம். “கடவுளுக்கென நேரம் ஒதுக்குங்கள்!. பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்க்கையில் கடவுளுக்கு இடமில்லை, நேரமில்லை என்பது போல நடித்துக் கொண்டிருக்கின்றனர். மனிதர் தன்னைப்பற்றியே அதிகம் எண்ணிக்கொண்டிருக்கின்றனர். மனிதர் தன்னைப்பற்றியே அதிகம் எண்ணிக்கொண்டிருப்பதால் அவரது வாழ்க்கை தன் மையம் (Self – Centered) கொண்டதாக ஆகி விடுகிறது. கடவுளைப் பற்றிய சிந்தனையின்றி, துயரப்படும் ஏழைகள் பற்றிக் கவலையின்றி வாழ்கின்றனர்.”

தன்னை மறந்து பிறர் துன்பங்கள் தன்னுடையதே; அடுத்தவர் துன்புற்றால் நானும்தான் துன்புறுகிறேன் என்று எண்ணத் துவங்கும்போதே நாம் கடவுளுக்கு நேரம் ஒதுக்குவோம். ஆம், இந்நாட்களில் கடவுளுக்கு நேரம் அதிகளவு ஒதுக்குவோம். பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் பரிந்துரைப்போம். பரிந்துரைப்பது மட்டுமல்ல; அவரது கரமாக மாறுவோம். இயேசு ஆண்டவர் தந்தையின் மேல் நிறைவான அன்பு கொண்டிருந்ததால் கடவுளுக்கென அதிக நேரத்தைக் கொடுப்பதற்கு அவரால் முடிந்தது என்பதில் சந்தேகமில்லை. இயேசுவின் வாழ்விலிருந்து

நாம் அறிவது “நேரத்தைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்மீது நமக்கு உண்மையான அன்பு இருந்தால் போதும்; தேவையான நேரத்தை நாம் கொடுக்க இயலும். அதிலும் குறிப்பாக கொரோனாவால் தனித்திருக்கும் நாம் பிற மக்களைப் போல் சமூக விலகலை மட்டும் கடைப்பிடிக்கின்றோமா? இயேசுவின் சீடத்துவ வாழ்வில் பங்கு பெற அழைக்கப்பட்டுள்ள நமக்கு அதைவிடக் கடமை நமக்குண்டு. நமது பங்கில், கிராமத்தில், நமது பள்ளி மாணவ மாணவிகளில் தற்போது பொருளாதார ரீதியாகத் துன்புறுவோரை இனம் காணுவோம். நமது பாக்கெட் பணம், ***“எளியோர் வாழ்வு மலர”*** நிதியிலிருந்து கிடைக்கும் பணம்; நமது தியாகத்தால் சேகரிக்கு*ம் பணம் போன்றவற்றை விரயமாக்காது* ஏழைகளுடன் பகிருவோம். “கண்முன்னேயுள்ள சகோதரர், சகோதரிகளிடம் (ஏழையர், துன்புறுவோர்) அன்பு செலுத்தாதோர் கண்ணுக்குப் புலப்படாத கடவுளிடம் அன்பு செலுத்த முடியாது (1 யோவான் 4:20) என்பதை உணர்ந்தவர்களாய் இறைவனின் கரமாய் நின்று உணவின்றி தவிப்போருக்கு உதவுவோம்.

தொழிலாளரின் பாதுகாவலரான புனித யோசேப்பின் திருநாளோடு மே மாதத்தினை துவங்குகிறோம். எத்தனையோ கூலியாட்கள், தொழிலாளர்கள் வேலையின்றி தவிக்கும் நிலையில் இயல்பு நிலை திரும்ப இறைவனிடம் பரிந்துரைப்போம். முடங்கிக் கிடந்த திருத்தூதர்களை ஒன்றிணைத்து உறுதிப்படுத்தி தூய ஆவியானவரின் வருகைக்குத் தயாரித்த அன்னை மரியாவின் மாதமாம் மே மாதத்தில் நாமும் *கானாவூர் பணியளர்களுக்கு மரியாள்* பரிந்துரைத்த **“அவர் சொல்வதைச் செய்யுங்கள்”** என்ற வார்த்தையை ஏற்று ஆண்டவர் பாதம் அமர நேரம் கொடுத்து அவர் சொல்வதைச் செய்வோம்.

**இம்மாதம் பிறந்தநாள் மற்றும் நாமவிழா கொண்டாடும் சகோதரிகளுக்கு வாழ்த்துக்களும் & செபங்களும்....**

கிறிஸ்துவில் அன்புள்ள

(சகோ. அல்போன்ஸ் பாத்திமா)

# நாம விழா வாழ்த்துக்கள்!

| | | | |
|---|---|---|---|
| 1. | சகோ. அல்போன்ஸ் பாத்திமா S | மே 13 | மாநில இல்லம் |
| 2. | சகோ. ஜெசிந்தா மேரி D | ,, | லெயோனார்டு மருத்துவமனை - மதுரை |
| 3. | சகே. ஜெசிந்தா செல்வி | மே 16 (பி) | பசும்பொன் -கமுதி |
| 4. | சகோ. ஜான்ஸி ராணி J | மே 20 (பி) | பசும்பொன் -கமுதி |
| 5. | சகோ. சகாய மேரி S | மே 24 | மசபியேல் - மதுரை |
| 6. | சகோ. தேவ சகாய ராணி | ,, | ஜோ வில்லா |
| 7. | சகோ. சகாய சாந்தி | ,, | ஜோ வில்லா |
| 8. | சகோ. சகாய பபிஸ்டா | ,, | ஜோ வில்லா |
| 9. | சகோ. சகாய சாந்தி S | ,, | நிர்மல் பவன் |
| 10. | சகோ. சகாய ராணி A | ,, | காரங்காடு |
| 11. | சகோ. சகாய சேசு மேரி P | ,, | லெயோனார்டு இல்லம் - மதுரை |
| 12. | சகோ. சகாய ஸ்டெல்லா J | ,, | மாநில இல்லம் |